## கட்சியின் பெயரிலேயே அண்ணா பெயரை வைத்துக்கொண்டு

# அண்ணாவை விமர்சிக்கும் மாநாட்டில் பங்கேற்றது வெட்கமாக இல்லையா?

## அ.தி.மு.க.வுக்கு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கண்டனம்!

**சென்னை, ஜுன் 24-**

**“கட்சியின் பெயரிலேயே அண்ணாவின் பெயரை வைத்துக்கொண்டு பேறறிஞர் அண்ணா அவர்களை விமர்சிக்கும் மாநாட்டில் பங்கேற்றது அ.தி.மு.க.வுக்கு வெட்கமாக இல்லையா?” என்று கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கண்டனம் தெரிவித்துள்ளார்.**

**இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-**

மதுரையில் நடந்த முருக பக்தர்கள் மாநாட்டில் பெரியார், அண்ணா குறித்த விமர்சனங்கள் அடங்கிய வீடியோவை பார்த்து ரசித்திருக்கிறார்கள். ‘அண்ணா’ பெயர் தாங்கிய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னாள் அமைச்சர்கள் ஆர்.பி.உதயகுமார், செல்லூர் ராஜு, கடம்பூர் ராஜு, ராஜேந்திர பாலாஜி ஆகியோர் அண்ணாவைக் கேவலப்படுத்துவதை ‘அண்ணா’ என்ற பெயர் தாங்கிய கட்சி ரசிக்கிறது என்றால், உங்களின் உடம்பில் ஓடுவது அ.தி.மு.க. ரத்தமா? பா.ஜ.க. பாசமா? அண்ணாவின் பெயரைக் காப்பாற்றுவதை விடத் தங்களின் சொத்துக்களைக் காப்பாற்றுவதே முக்கியம் என நினைத்துவிட்டார்கள்.

உங்கள் தாயை, உங்கள் மனைவியை விமர்சனம் செய்தாலும் இப்படிதான் சோற்றால் அடித்த பிண்டங்களாக அமர்ந்திருப்பீர்களா?

### சரியான ஆளுமை இல்லை!

இன்றைக்கு எம்ஜிஆரும் ஜெயலலிதாவும் இருந்திருந்தால் என்ன நடந்திருக்கும்? அ.தி.மு.க.வில் சரியான ஆளுமை இல்லாததால், அண்ணாவுக்கும் பெரியாருக்கும் இந்த அவமானத்தைத் தேடித் தந்திருக்கிறார்கள். ஒன்றிய அரசின் வருமானவரித் துறை அமலாக்கத் துறை உள்ளிட்ட அதிகாரமிக்க முட்டை, அம்மிக் கல்லையே சுக்கு நூறாக்கும். ஆளுமையில்லாத அ.தி.மு.க.வை மட்டும் அது விட்டு வைக்குமா?

‘நாட்டாமை’ திரைப்படத்தில் கவுண்டமணிக்கு பெண் பார்க்கும் காட்சியில் ஒருவர் மிக்சர் சாப்பிட்டுக் கொண்டிருப்பார். அந்தக் கதாபாத்திரத்தை போல முருகன் மாநாட்டில் எந்த ரியாக்ஷனும் காட்டாமல் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் அமர்ந்திருக்கிறார்கள்.

அங்கே நீங்கள் மிக்சர் சாப்பிட வா போனீர்கள்? 2026 சட்டமன்றத் தேர்தலில் அண்ணாவின் பெயரைச் சொல்லி ஓட்டு கேட்டு மட்டும் நீங்கள் வந்து விடாதீர்கள்.

### கொடியில் அமித்ஷாவை வைத்து விட்டீர்களா?

அ.தி.மு.க.வின் கொடியின் நடுவே வெள்ளையாக ஒருவர் விரல் காட்டிக் கொண்டிருப்பாரே தெரியுமா? அந்த அண்ணாவை மாற்றி விட்டு, அங்கே அமித்ஷாவை வைத்து விட்டீர்களா? ‘மானமும் வீரமும் மனிதனுக்கு அழகு’ எனச் சொன்னார் பெரியார். அந்த மானத்தை இழந்து, வீரத்தைத் துறந்து, அடிமையாக வளைந்து, குனிந்து, ஒடிந்தே விட்டது அ.தி.மு.க.!

1956ஆம் ஆண்டு மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்தில் நடைபெறாத ஒரு சம்பவத்தைச் சொல்லி அண்ணாவை விமர்சித்தார் தமிழக பா.ஜ.க. தலைவராக இருந்த அண்ணாமலை. அதற்கு எதிர்வினை ஆற்றிய அ.தி.மு.க. இன்றைக்கு எங்கே ஓடி ஒளிந்து கொண்டது?

### நாக்பூரில் தஞ்சம் அடைவாரா?

நேற்று முருகன் மாநாட்டில் முன்னாள் அமைச்சர்கள் கலந்து கொண்டார்கள், இன்றைக்குக் கோவையில் RSS நூற்றாண்டு விழாவில் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி பங்கேற்கிறார். அடுத்து நாக்பூரில் எடப்பாடி பழனிசாமி தஞ்சம் அடைவாரா?

விஜயதசமி விழாவிற்காக கன்னியாகுமரியில் 2024 அக்டோபர் 6ம் தேதி ஆர்.எஸ்.எஸ் பேரணியை அ.தி.மு.க.வின் தளவாய் சுந்தரம் கொடியசைத்துத் தொடங்கி வைத்ததற்காக, தளவாய் சுந்தரத்தைக் கட்சிப் பதவியிலிருந்து பழனிசாமி நீக்கினார். அடுத்த மாதமே அவரை சேர்த்துக் கொண்டார். அப்படியான நாடகம் கூட RSS நூற்றாண்டு விழாவில் பங்கேற்ற எஸ்.பி.வேலுமணிக்கு நடக்கவில்லை. மும்மொழிக் கொள்கைக்கு



ஆதரவாக பா.ஜ.க. கையெழுத்து இயக்கம் நடத்தியபோது அதில் கையெழுத்திட்ட அ.தி.மு.க. முன்னாள் எம்.எல்.ஏ. விஜயகுமார் கட்சியிலிருந்து நீக்கப்பட்டு, பிறகு சேர்க்கப்பட்டார். இப்படியான பா.ஜ.க. பாசக் காட்சிகள் முருகன் மாநாட்டிலும் அரங்கேறியிருக்கின்றன.

மதவாத பிரிவினைவாத அரசியல் மூலம் அதிகாரத்தைப் பிடிக்க வட மாநிலங்களில் ராமரை வைத்து கலவரம் செய்த பா.ஜ.க., தமிழ்நாட்டில் முருகனை வைத்து கலவர விதையை முருகன் மாநாடு மூலம் தொடங்கியுள்ளது. இந்துத்துவக் கும்பல் மூட்டும் கலவரத் தீயிக்கு எண்ணெய் ஊற்றும் எடுபிடி வேலையை எடப்பாடி பழனிசாமி வெட்கமே இல்லாமல் செய்திருக்கிறார்.

“திராவிடம் பற்றி அறிஞர்களிடத்தில்தான் கேட்க வேண்டும்” என்று முன்பு சொன்னவர் தானே பழனிச்சாமி. அவர் இன்றைக்கு இந்துத்துவத்தில் முழுமையாக கரைந்துவிட்டார். தி.மு.க.வை எதிர்க்கும் மாநாடு என்கிற ஒரே காரணத்திற்காகத் திராவிடத்தை இந்துத்துவாவின் காலடியில் கொண்டு போய் வைத்துவிட்டார் பழனிசாமி. திராவிடத்தை மட்டுமா, பெரியாருக்கும் அண்ணாவுக்கும் இழுக்கையும் அல்லவா தேடித் தந்துவிட்டார்.

### எம்.ஜி.ஆர். எதிர்த்த இந்து முன்னணி!

எம்.ஜி.ஆர். எதிர்த்த இந்து முன்னணியை இன்றைய அ.தி.மு.க. சிவப்புக் கம்பளம் போட்டு வரவேற்கிறது. 1982 ஆம் ஆண்டு எம்.ஜி.ஆர். ஆட்சியில் நடைபெற்ற மண்டைக்காடு கலவரம் பற்றியும், இந்து முன்னணி குறித்தும் எம்.ஜி.ஆர். 29.3.1982 அன்று சட்டப்பேரவையிலேயே தனது கண்டனத்தைப் பதிவு செய்திருக்கிறார். “இந்து முன்னணி என்ற பெயரால் பேரணி நடத்துகிறார்கள். இந்தப் பேரணியால் நாட்டுக்கு நன்மையா? சிந்திக்க வேண்டும்” என்று அன்றைக்குச் சொன்னவர் எம்.ஜி.ஆர்.

முருக பக்தர்கள் மாநாட்டிற்கு, ‘சூரனை வதம் செய்த முருகா! திராவிடத்தை அழிக்க வேலெடுத்து வா!’ என்றும் ’திராவிடத்தை அழிக்க வேலெடுத்து ஓடி வா முருக பக்தர்களே’ என்றும் இந்து முன்னணியினர் சுவரொட்டி ஒட்டியிருக்கிறார்கள். திராவிடத்தை அழிக்கும் முருகன் மாநாட்டிற்கு ‘திராவிட’ என்ற பெயர் தாங்கிய அ.தி.மு.க.வின் பொதுச் செயலாளர் பழனிச்சாமி வாழ்த்து தெரிவிக்கிறார். திராவிடத்தை அழிக்கும் மாநாட்டில் திராவிடத்தால் அமைச்சரானவர்கள் கலந்து கொள்கிறார்கள். திராவிடம் அழிந்தால், அ.தி.மு.க.வும் சேர்ந்தே அழியும் என்று கூட தெரியாத அளவுக்கா பாழும் கிணற்றில் அ.தி.மு.க. விழுந்து கிடக்கிறது.

திராவிட இயக்கத்தின் பெயரையும் அண்ணாவின் பெயரையும் தனது கட்சியின் பெயரிலேயே வைத்துக் கொண்டு, தந்தை பெரியாரை எங்களது தலைவர் என்று கூறிக் கொண்டு, பா.ஜ.க.வின் பாசிச அரசியலுக்குத் துணை போய்த் துரோகம் செய்திருக்கிறது அ.தி.மு.க.. மக்களின் ஒற்றுமையைச் சீர்குலைக்க நடக்கும் மாநாட்டிற்குத் தனது கட்சி சட்டமன்ற உறுப்பினர்களை அனுப்பி அழகு பார்த்திருக்கிறார் துரோகி பழனிசாமி. கட்சியின் பெயரிலேயே அண்ணாவை வைத்துக்கொண்டு அண்ணாவை மோசமாக விமர்சிக்கும் மாநாட்டில் பங்கு கொள்ள வெட்கமாக இல்லையா?

### அ.தி.மு.க. கரைந்துவிட்டது!

முருகன் மாநாடு முழுவதும் வெறுப்புப் பேச்சுக்களால் மட்டுமே கட்டமைக்கப்பட்டிருந்தது. ஆந்திரத் துணை முதலமைச்சர் பவன் கல்யாண், பா.ஜ.க.வின் அண்ணாமலை உள்ளிட்டோர் பேசிய சிறுபான்மையினருக்கு எதிரான வெறுப்புப் பேச்சுகளை எல்லாம் முன் வரிசையில் அமர்ந்து கேட்டுக் கொண்டிருந்தார்கள் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள். வெறுப்புப் பேச்சுகளை எல்லாம் அ.தி.மு.க. ஏற்றுக் கொள்கிறது போல! “ஒன்றே குலம் ஒருவனே தேவன்” என்கிற அண்ணாவின் கூற்றைப் பற்றிக் கவலைப் படாமல் இந்துத்துவத்தில் முற்றிலுமாக அ.தி.மு.க. கரைந்துவிட்டது.

தமிழ்நாட்டு மக்களிடம் பன்னெடுங்காலமாக நிலவி வரும் சமய நல்லிணக்கத்தையும் ஒற்றுமையையும் குலைக்க வேண்டும் எனும் சதி நோக்கத்தோடு பா.ஜ.க.வும் இந்து முன்னணியும் நடத்திய முருகன் மாநாடு, பா.ஜ.க. என்ற பாசிச எதிரிகளை மட்டுமல்ல, அடிமை அ.தி.மு.க. துரோகிகளையும் அடையாளம் காட்டியிருக்கிறது.

இந்தியாவிலேயே பா.ஜ.க.வின் மதவெறி அரசியலுக்கு இடம் தராத ஒரே மண் தமிழ்நாடு. இங்கே எப்படியாவது நுழைந்துவிட வேண்டும் எனும் கலவர நோக்கத்தோடு, பல வித்தைகளை பா.ஜ.க. காட்டினாலும் அவை படுதோல்வியையே சந்திக்கின்றன. அதற்குக் காரணம் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரால் தலைமையேற்று நடத்தப்பட்ட திராவிட இயக்கம்தான். அந்த இலட்சியப் பணியைத் தலைமையேற்று நடத்தி பா.ஜ.க.வின் பாசிச அரசியலுக்கு எதிரான சிம்ம சொப்பனமாகத் திகழ்கிறார் தமிழ்நாடு முதலமைச்சர்.

திராவிடத்தை அழிக்க முருகன் மாநாடு நடத்தும் பா.ஜ.க.வுடன் அ.தி.மு.க. கூட்டணி வைத்திருக்கிறது. பா.ஜ.க.வின் பண்ணையடிமையாக மாறியிருக்கும் பழனிசாமியின் இந்தத் துரோகத்திற்கு 2026 தேர்தலோடு தமிழ்நாட்டு மக்கள் முற்றுப் புள்ளி வைப்பார்கள்.

இவ்வாறு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

---

### சென்னை - சிந்தாதிரிப்பேட்டை - மே தின பூங்காவில்

# ரூ.6 கோடி மதிப்பில் மேம்படுத்தப்பட்ட விளையாட்டு மைதானம்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்!

*சென்னை, ஜுன்.24-*

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னை, சிந்தாதிரிப்பேட்டை மே தின பூங்காவில் 6 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட விளையாட்டு மைதானத்தை திறந்து வைத்தார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (23.6.2025) சென்னை, சிந்தாதிரி ப்பேட்டை மே தின பூங்காவில் சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம் சார்பில் 6 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட மே தினப் பூங்கா விளையாட்டு மைதானத்தை திறந்து வைத்தார்.

சென்னை, சிந்தாதிரி ப் பேட்டை மே தினப் பூங்காவில் உள்ள விளையாட்டு மைதானம் 6 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்டுள்ளது. அதனடிப்படையில், மே தினப் பூங்கா விளையாட்டு மைதானத்தில் இறகுப்பந்து உள்விளையாட்டு அரங்கம், குத்துச்ச ண்டை உள்விளையாட்டு அரங்கம், சக்கர சறுக்கு விளையாட்டு பகுதி, கால்பந்து திடல், கையுந்து பந்து திடல், பார்வையாளர் மாடம், கிரிக்கெட் பயிற்சி பெறுவதற்கான வலை கூடம் உள்ளிட்ட விளையாட்டு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இவ்விளையாட்டுத் திடலை பயன்படுத்தும் பொது மக்களுக்காக, உடைமாற்றும் அறையுடன் கூடிய ஒப்பனை அறைகள், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி, நிர்வாக அலுவலகம், முதலுதவி அறை, 28,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட கீழ்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, கழிப்பறை வசதி மற்றும் வாகனம் நிறுத்துமிடம் ஆகிய வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இந்நிகழ்ச்சிகளில், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜெ. குமரகுருபரன், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும முதன்மை செயல் அலுவலர் அ.சிவஞானம், துணை மேயர் மு.மகேஷ்குமார், நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, மண்டலக்குழுத் தலைவர் எஸ்.மதன்மோகன், வட்டார துணை ஆணையர் கட்டா ரவி தேஜா, அரசு அலுவலர்கள், மாமன்ற உறுப்பினர்கள், விளையாட்டு வீரர், வீராங்கனைகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

---

### இ.கருணாநிதி எம்.எல்.ஏ. - எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. - மேயர் வசந்தகுமாரி - ரபி அகமது - கோ.காமராஜ் - வே.கருணாநிதி பங்கேற்பு!

# பம்மல் வடக்கு பகுதிக் கழகச் செயல்வீரர்கள் கூட்டம்!

## அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரை! பகுதிச் செயலாளர் த.ஜெயக்குமார் அறிவிப்பு!

*காஞ்சிபுரம், ஜுன். 24-*

பம்மல் வடக்கு பகுதிச் செயலாளர் திருநீர்மலை த. ஜெயகுமார் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

தாம்பரம் மாநகரம், பம்மல் வடக்கு பகுதி தி.மு.க. செயல்வீரர் கள் கூட்டம் இன்று (24 - 6 - 2025, செவ்வாய்க்கிழமை) மாலை 5.30 மணியளவில் எஸ்.எஸ். மஹால், பம்மலில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு பகுதி அவைத் தலைவர் கே.சந்திரன் தலைமை வகிக்கிறார்.

எஸ்.கே. நெப்போலியன், மு.ஸ்ரீதர், க.ஜெயசீலன், ஜி. பப்பிதா, சி.பார்த்த சாரதி, இரா.குமரேசன், இரா. பாபுஜி, க.சுந்தர மூர்த்தி, மு.நித்யானந்தம் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

பம்மல் வடக்கு பகுதிச் செயலாளர் திருநீர்மலை த. ஜெயகுமார் வரவேற்புரையாற்றுகிறார்.

இக்கூட்டத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் தா. மோ.அன்பரசன் சிறப்பு ரையாற்று கிறார்.

இக்கூட்டத்தில் இ.கருணாநிதி எம்.எல்.ஏ., எஸ்.ஆர். ராஜா எம்.எல்.ஏ., மேயர் திருமதி க.வசந்தகுமாரி, தொகுதிப் பார்வையாளர் ரபி அஹமது, துணை மேயர் கோ.காமராஜ், தெற்கு பகுதிச் செயலாளர் வே.கருணாநிதி, இரா.நரேஷ்கண்ணா எம்.சி., ப.அன்பழகன், க.மோகன், மு.நி.தமிழ்குமரன், ப.ஆண்டவன், இ.பாலாஜி, டி.எம். ஜோசப், கலைவாணி பிரபு, வாணிஸ்ரீ விஜயகுமார், சித்ரா தமிழ்குமரன், சண்முகசுந்தரி ஜெயகுமார், சித்ராதேவி முரளிதரன் ஆகியோர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் பம்மல் வடக்கு பகுதிக்கு உட்பட்ட வாக்குச்சாவடி ஒருங்கிணைப் பாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழக அணிகளின் மாவட்ட, மாநகர, பகுதி அமைப்பாளர் கள், துணை அமைப்பாளர்கள், வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA-2), வாக்குச்சாவடி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப் பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

முடிவில் ச.பிரபு, ஞா. பிரபு, ஏ.செந்தில்குமார் ஆகியோர் நன்றியுரையாற்றுகின்றனர்.

பொருள் : மண் - மொழி - மானம் காத்திட “ஓரணியில் தமிழ்நாடு” உறுப்பினர் சேர்க்கை குறித்து.

இவ்வாறு பகுதிச் செபலாளர் திருநீர்மலை த.ஜெயகுமார் கேட்டுக் கொண்டுள்ளார்.

---

**தி.மு.க. கல்வியாளர் அணி**

**நிர்வாகிகள் நியமனம்**

**தலைமைக் கழக அறிவிப்பு**

**மதுரையில் 01.06.2025 அன்று நடைபெற்ற தி.மு.க. பொதுக்குழுவில் தி.மு.க. சட்ட திட்டம் விதி 31, பிரிவு 21–ன்படி, கழகத் தலைவர் அவர்களால் அறிவிக்கப்பட்ட தி.மு.க. கல்வியாளர் அணி நிர்வாகிகள் பின்வருமாறு அறிவிக்கப்படுகிறது.**

**தி.மு.க. கல்வியாளர் அணி**



**தலைவர்**

**புலவர் ந.செந்தலை கவுதமன்,** பி.லிட்., எம்.ஏ., பி.எட்.,



**செயலாளர்**

**முனைவர் தமிழச்சி தங்கப்பாண்டியன்,** எம்.ஏ., பி.எச்டி., எம்.பி.,

**“அண்ணா அறிவாலயம்’’**
**சென்னை – 600 018,**
**நாள் : 23–06–2025.**

**துரைமுருகன்,**
**பொதுச்செயலாளர்,**
**தி.மு.க.**

---

**தி.மு.க. மாற்றுத் திறனாளிகள் அணி**

**நிர்வாகிகள் நியமனம்**

**தலைமைக் கழக அறிவிப்பு**

**மதுரையில் 01.06.2025 அன்று நடைபெற்ற தி.மு.க. பொதுக்குழுவில் தி.மு.க. சட்ட திட்டம் விதி 31, பிரிவு 22–ன்படி கழகத் தலைவர் அவர்களால் அறிவிக்கப்பட்ட தி.மு.க. மாற்றுத் திறனாளிகள் அணி நிர்வாகிகள் பின்வருமாறு அறிவிக்கப்படுகிறது.**

**தி.மு.க. மாற்றுத் திறனாளிகள் அணி**



**தலைவர்**

திரு. **ரெ. தங்கம்,** எம்.காம்.,



**செயலாளர்**

**பேராசிரியர் டி.எம்.என்.தீபக்,** எம்.எஸ்.டபிள்யூ., எம்.எஸ்சி., பி.எச்டி.,

**“அண்ணா அறிவாலயம்’’**
**சென்னை – 600 018,**
**நாள் : 23–06–2025.**

**துரைமுருகன்,**
**பொதுச்செயலாளர்,**
**தி.மு.க.**